திரு. ஜெயக்குமார், திரு. சேகர்பாபு, (கூச்சல்—குழப்பம்) இரண்டு பேரும் உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) பேரவையினுடைய தலைவராக இருக்கக்கூடிய என்மீது, அவை உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். நேற்று அது அலுவலகத்தில் பெறப்பட்டது. அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிற அந்த வேண்டுகோளில் ஏகப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. இருந்தாலும் அதை அனுமதித்து இங்கே எடுத்துக்கொண்டு, அதன்மீது வழிமொழியக்கூடிய உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகின்றேன். அப்படி வழிமொழியக்கூடிய உறுப்பினர்கள் இங்கு இருக்கிறார்கள் என்றால், அவர்கள் எழுந்து நிற்க வேண்டுகிறேன்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

திரு. டி. ஜெயக்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தைப் படித்துவிடுகிறேன். தீர்மானம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் முதலில். (கூச்சல்—குழப்பம்) அரசினர் தீர்மானம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (கூச்சல்—குழப்பம்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

2. அரசினர் தீர்மானம்

விதி 68—ஐத் தளர்த்தல்

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உடனடியாக இந்த அவை எடுத்துக்கொள்ள அனுமதிப்பதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி)

"சட்டமன்றப் பேரவை விதி 68—ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானத்திற்கு 14 நாட்கள் முன்னறிவிப்பு அளிக்க வேண்டும் என்ற விதியினைத் தளர்த்தி முனைவர் மு. தம்பிதுரை அவர்கள் 2–8–2006 அன்று அளித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை—பேரவைத் தலைவர்மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை இன்றே பேரவையில் எடுத்துக்கொள்ள வேண்டும்"

2006 ஆகஸ்ட் 3] [பேராசிரியர் க. அன்பழகன்]

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவைத் தலைவரை நீக்க வேண்டும் என்னும் தீர்மானம் அவையில் முன்மொழியப்பட இருப்பதால், தீர்மானத்தின்மீது அவை முடிவு எடுக்கும் வரை சபையின் அனைத்து அலுவல்களையும் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர், தலைமை இருக்கையிலிருந்து இறங்கி தனது அறைக்குச் சென்றார்.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 9–35

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

3. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, நான் பேசி விடுகிறேன். இப்போது பேரவையின் முன்னுள்ள அலுவல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானமாகும். இத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதித்துள்ளதா அல்லது இல்லையா என்பதை அறிவதற்கு முன்பு, பேரவை விதி 70(1)–ன்படி இத்தீர்மானத்தை நான் பேரவைக்குப் படிக்க வேண்டும். தீர்மானம் கீழ்க்கண்டவாறு உள்ளது:—